உ

சிவமயம்



மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும் இலங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திரு சோமசுந்தரம் கந்தசாமி அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

In Loving Memory of

# Late Mr. Somasundram Kandasamy

08.05.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இருளகன்ற வாழ்வு தந்து
இன்முகத்தோடு இன்சொல் பேசி
பார்புகழும் நிலையில் வாழ்ந்து
பார்க்கும் இடமெல்லாம் நினைவு தந்து
மனிதருள் மாணிக்கமாய்
மாவிட்டபுரத்தில் பிறந்து
மாவைக் கந்தனின் பெயர் பூண்டு
மகாஜனாக் கல்லூரி மாணவனாய் திகழ்ந்து
மருந்தாளர் தொழிலை மகத்தாய் செய்து
ஈற்றில் இறையடி சேர்ந்த
எம் தந்தைக்கு சமர்ப்பிக்கின்றோம்
இந்நினைவு மலர்தனை

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு சோமசுந்தரம் கந்தசாமி



அன்னை மடியில்
14. 09. 1942

ஆண்டவன் அடியில்
08. 04. 2015.

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு ஜெயஅமைந்த பங்குனித் திங்கள்
பூண்ட அபரபக்க சதுர்த்திதனில் - மாண்பு
சோமசுந்தரம் மைந்தன் கந்தசாமி ஐயன்
பூமிதனை நீத்தார் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் வணக்கம்

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந் தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே

அரியானை அந்தணர்தஞ்சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவையார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள் தங்கோன் மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே

மாதர்ப்பிறைக்கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமல் ஐயாரடைகின்றபோது
காதன்மடப்பிடயோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேனவர்திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றாயினவாறு விலக்ககலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றினகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றெனடியே னதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே

## திருவாசகம்

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொடுஞ்சுடர்க்குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்து
என் மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெரும் துறையுறை சிவனே
இறைவனே நீ என் உடல் இடம் கொண்டாய்
இனி உன்னை என் இரக்கனே

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மைபே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப்பிடித்தேன்
எங்கழுந் தருளுவதினியே

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச்சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர்விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக்கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துனகந்தாயைத்
தொண்டேன் விளம்புமா விளம்பே

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டு உள்ளம்
குளிரஎன் கண்கள் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்

## பெரியபுராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப்புகழ் பாடி
முக்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்னச் சிவகதிதானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்வுச் சித்திரத்தின் வண்ணமிகு வடிவங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து ஏறத்தாழ 12 கிலோமீற்றர் தொலைவில் செந்தமிழும், சைவமும் தழைத்தோங்கும் மங்காப்புகழ் ஊராகத்திகழ்வது மாவிட்டபுரம். இத்தகு சிறப்பு வாய்ந்த மாவிட்டபுரத்தில் சைவவேளாண் குலத்திலகராய் விளங்கிய திருவாளர் சோமசுந்தரம் அவர்தம் துணைவியார் அன்னப்பிள்ளை தம்பதிகளின் இல்லறப் பயனாக ஆண்டு 1942 புரட்டாதி 14 மலேசியா கோலாலம்பூரில் கந்தசாமி எனும் நாமம் கொண்டு நான்காவது அரும்புதல்வனாக இவ்வுலகில் தோற்றம் பெற்றார்.

சீரும் சிறப்புடனும் மலேசியா கோலாலம்பூரில் வாழ்ந்த இவர்கள் 1948ம் ஆண்டு தாயகம் வந்தடைந்தார்கள். இவர் தனது ஆறாவது வயதினிலே தந்தையை இழந்தார். தாயின் அன்பு அரவணைப்பிலும் அவரது வழிகாட்டலிலும் தனது ஆரம்பக்கல்வியை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் தொடர்ந்தார். பள்ளிப் பருவத்திலே விளையாட்டுத் துறையில் இவர் செய்த சாதனைகள் அளப்பரியது. இவர் தனது மருந்தாளர் பயிற்சிக் கல்வியை கொழும்பு மருத்துவக் கல்லூரியில் சிறப்புற முடித்து மன்னார், இரத்தினபுரி, இறாகம ஆகிய அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றினார்.



சிறுவயது முதலே குடும்பப் பொறுப்புடனும், இளமை அழகும் கம்பீரத் தோற்றத்துடனும் சிறந்து விளங்கிய இவரை உடுவிலில் சைவவேளாண் குலத்திலே தோன்றிய வைத்தியர் சரவணமுத்து பவளம்மா தம்பதிகளின் அன்பும், பண்பும் நிறைந்த நம் பண்பாட்டில் சிறந்த மகள் இரஞ்சிதபூமலருக்கு வாழ்க்கைத் துணையாக இணைத்து தனது மருமகனாக அவரை வரிந்து கொண்டனர்.

இல் வாழ்வில் இனிமையும் கனிவும் வழங்கிய இனிய கோலங்களாக தம்பதிகள் தம் வாழ்வில் ஜெகனி, யாழினி குகானந்தி என மூன்று பெண் பிள்ளைகள் கிடைக்கப் பெற்றனர். நாளும் பொழுதும் தம் புத்திரச் செல்வங்களை நலம் பெறப்பேணி வளர்க்கும் காலத்திலே மத்திய கிழக்கு நாடான ஓமானில் மருந்தாளராக வேலை செய்யும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. அயராது உழைக்கும் திறமை கொண்ட இவர் 1981ம் ஆண்டு ஓமான் நாட்டிலே தனது மருந்தாளர் தொழிலைத் தொடர்ந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமான்சீமான்" என்று அக்காலத்திலே அனைவராலும் அழைக்கப்பட்ட இவர் உடுவில் மண்ணில் ஊரே மெச்சும் வகையில் மனை அமைத்து "ஜெகவாசம்" என்று பெயரும் சூட்டி தனது குடும்பத்தை சிறப்புற வாழ வைத்தார்.

யாழில் ஏற்பட்ட இடப்பெயர்வினால் அவருடைய மூன்று பிள்ளைகளும் கொழும்பிலே தங்களது கல்வியைத் தொடர்ந்தனர். அவர்கள் கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்கியமை கண்டு உள்ளம் பூரிப்படைந்தார்.

தனது பிள்ளைகளது கடமையை சிறப்புறச் செய்யவும் அவர்கள் திருமணமாகி இல்லற வாழ்வில் இணையும் வரை அவர்களுடன் வாழ ஆசைப்பட்டு, 1995ல் தாயகம் திரும்பி கொழும்பில் Royal Hospital இல் தனது மருந்தாளர் தொழிலைத் தொடர்ந்தார்.

இவர் கொழும்பு Esses Pharmacy, Mediclinic ஆகிய இடங்களிலும் தொழில் புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது மூத்த மகள், பாடசாலைக் கல்வியை முடித்ததும் பட்டயக் கணக்காளர் நிலையத்தில் (Institute of Chartered Accountants) கணக்காளர் கல்வியத் தொடர்ந்தார். அதே காலத்தில் Colombo Sri Raam Enterprisesல் பணிபுரிந்தார். இவர் தற்போது Londonல் உள்ள கணக்காளர் நிறுவனத்தில் கணக்காளராகக் கடமை ஆற்றி வருகிறார். சிறந்த குடும்பப் பொறுப்புடன் விளங்கிய இவருக்கு Germanyல் தொழில் புரிந்த அன்பும் பண்பும் நிறைந்த திரு சுதாகரன் என்பவரைத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து வைத்தார். இவர்கள் இனிது வாழ்ந்து பெற்ற செல்வங்கள் கிஷோபன் தனுஷனுடன் அமரர் சிலகாலம் Germanyல் சேரந்திருந்து அகமகிழ்வடைந்தார்.

இவரது இரண்டாவது மகள் சிறுவயது முதலே ஆசிரியர் தொழிலில் ஆர்வம் கொண்ட காரணத்தினால் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சியை முடித்து ஆசிரியராகக் கடமையாற்றி வருகிறார்.

இவருக்கு அதே தொழில் புரியும் திரு பிரியகாந்தன் என்னும் அன்பும், பண்பும் நிறைந்தவரைத் திருமணம் செய்து கொடுத்து, இவர்கள் இனிதுற வாழ்ந்து பெற்ற செல்வங்கள் சந்தோஷ், சப்தகி, சங்கீர்த் ஆகிய பேரப்பிள்ளைகளுடன் தனது இறுதிக்காலம் வரை சேர்ந்திருந்து அவர்களுடைய கல்விக்கு பெரிதும் உறுதுணையாக இருந்தார். இவர்கள் மேல் வைத்த பாசத்தினால் தனது இறுதிக்கடமையையும், இறுதிக் கிரியைகளையும் செய்யும் பாக்கியத்தை இவர்களுக்கு கொடுத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கடைசி மகள் குகானந்தியை பாடசாலைக் கல்வி முடித்தபின் கணணிக் கல்வியில் (NCC International Diploma in UK) சிறப்புச்சித்தி பெறவைத்தார். இவர் Colombo Joan Arc (Pvt) கம்பனியில் கடமையாற்றினார். பின்னர் தந்தையைப் போலவே மருந்தாளர் பயிற்சிக் கல்லூரி களுத்துறைக்குத் தெரிவானார். இவ்வேளையில் ஜேர்மனியில் வெகு சிறப்போடும், கம்பீரத்தோற்றத்தோடும் விளங்கிய உருத்திரன் என்பவரைத் திருமணம் செய்து வைத்து இவர்களது அன்புச் செல்வங்களான அபினயன், அச்சுதன் ஆகிய பேரப்பிள்ளைகளுடன் சில காலம் Germanyல் வாழ்ந்து பெருமையுற்று பேரின்பம் அடைந்தார்.

பிள்ளைகளின் இல்லற வாழ்க்கையை இனிதுற அமைத்துக் கொடுத்த பூரிப்புடன் இவரும், இவரது மனைவியும் வவுனியாவிலே வாழ்ந்திருந்தனர். வவுனியா Raj Medical ல் கடமையாற்றிய இவர் தனது முதலாளி, சக ஊழியர்கள், நோயாளிகளுடனும் அன்பாகவும் ஆதரவாகவும் பேசி அனைவரதும் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றார். இறைவழிபாட்டுடன் நிம்மதியாக இருந்த இவரது அன்பு மனைவி ஆண்டு 2009 பங்குனி 6ம் திகதி எல்லோரையும் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தி இறைவனடி சேர்ந்தார்.



அன்பு மனைவியை இழந்த இவரது துயரம் வார்த்தைகளால் ஆற்ற முடியாதது. தன் மனைவியின் நீங்காத நினைவுகளுடன் தனது இரண்டாவது மகள் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார்.

சிறுவயது முதல் நேர்மை, நியாயம் உண்மை பேசுதல், பிறருக்கு உதவி செய்தலை தனது வாழ்க்கையின் கொள்கையாக இறுதிவரை அவர் கடைப்பிடித்தார். உடலில் வலிமையும், நெஞ்சில் தன்னம்பிக்கையும் உள்ளவரை இறுதி மூச்சுவரை மருந்தாளர் தொழில் செய்வேன் என்று மட்டக்களப்பு Asian Pharmacyல் ஜனவரி 2015 வரை கடமையாற்றினார்.

தனது வாழ்வியல் கடமைகளை செப்பமுற நிறைவு செய்து, இறைபக்தியுடன் எல்லோருடனும் ஒப்புரவாக வாழ்ந்து அன்புள்ளமாகத் துலங்கிய இம்மாமனிதர் 2015 ஆண்டு சித்திரை 8ம் திகதி இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா என்றும் இறைவன் திருவடியில் பேரின்பப் பெருவாழ்வு பெற்று பேரின்பத்தில் திளைத்திருக்க பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுத்துறையில் செய்த சாதனைகள்

வளங்களின் குவிப்பாக வையத்தில் விளங்குவது ஈழவளநாடு. சிதையாத செழுமை கொண்ட வளம்மிக்க யாழ் மண்ணில் விண்ணளவு புகழுடன் அன்றும் இன்றும் விளங்கும் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற பாடசாலை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி.

அமரர் சோமசுந்தரம் கந்தசாமி அவர்கள் தனது ஆரம்பக்கல்வியையும், உயர்தரக் கல்வியையும் மகாஜனக் கல்லூரியில் கற்றார். வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பது போல குழந்தைப்பருவத்திலிருந்தே தன்னுடைய திறனாற்றலை வெளிப்படுத்தினார். கல்வி, ஒழுக்கம், விளையாட்டு என்ற மூன்றிலும் சிறந்து விளங்கி நான் ஒரு மகாஜனன் என்று பெருமிதப்படுமளவிற்கு சிறந்த மாணவனாக விளங்கினார்.

காற்பந்து விளையாட்டில் ஆரம்பகாலம் முதலாக அபாரத்திறமை காட்டினார். இவர் 1959ம் ஆண்டு 2ம் பிரிவுக்குத் தலைவராகவும், 1961ம் ஆண்டு 1ம் பிரிவுக்கு அவரது அணி பாடசாலை சரித்திரத்திலேயே முதல் முறையாக இறுதியாட்டத்தில் விளையாட தகுதி அடைந்ததும் குறிப்பிடத்தக்கது. இவர் 1962ம் ஆண்டு பாடசாலை காற்பந்து அணியிலே சிறந்த காற்பந்து வீரனாக மட்டுமன்றி அணியின் தலைவராகவும் தனது அணியை சிறப்பாக வழிநடத்தி 1962 JSSA கிண்ணத்தை வென்றெடுத்து தனது பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்தார். அமரருடைய குடும்பத்திலே அவரைப் போலவே அவரது மற்றைய மூன்று ஆண் சகோதரர்களும் காற்பந்து, மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்கியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் மன்னார் மாவட்டத்தில் மருந்தாளராக வேலைசெய்த காலத்தில் அகில இலங்கை ரீதியில் மாவட்டங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட (Amateur Athletic Meet) மெய்வல்லுனர் போட்டியில் நீளம் பாய்தலில் முதல் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கம் (Gold Medal) வென்று தான் தொழில் புரிந்த மாவட்டத்திற்கும் தனது பாடசாலைக்கும் பெருமை தேடித்தந்தார்.

இவர் தனது காற்பந்து, மெய்வல்லுனர் விளையாட்டுத் திறமையால் அன்றைய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் அனைவரதும் நன்மதிப்பையும், அன்பையும் பெற்று மகாஜனாக் கல்லூரியின் விளையாட்டுத்துறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் மறக்க முடியாத தடம் பதித்து அனைவராலும் அறியப்பட்ட ஒரு சிறந்த விளையாட்டு வீரனாக தனது வாழ்நாளிலே பிரகாசித்தார்.

அமரர் உயிருடன் இருக்கும் காலத்திலேயே புதிய மகாஜனாக் கல்லூரி முகநூலில் இவரது விளையாட்டுத் திறமைகள், இவரது படங்கள் இணைக்கப்பட்டு "என்றும் மறக்க முடியாதவர்கள்" என்று பெருமைப்படுத்தியமை அவருக்கு பெருமகிழ்வைக் கொடுத்தது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Work Histroy

- Mannar General Hospital
- Ratnapura General Hospital
- Ragama General Hospital
- Sultanate of Oman *from 1981 to 1995 working as a Pharmacist*
- Royal Hospital Wellawatte
- Rajmedicals Vavuniya
- Esses Pharmacy Bambalapitya
- Mediclinic Wellawatte
- Rajmedicals Vavuniya
- Batticaloa Asian Pharmacy (January 2015)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தமகளின் கண்ணீர் அஞ்சலி!

இருளை அகற்றி ஒளியை எமக்களித்த
என் அன்பிற்கினிய தந்தையே!
என்னை சிறு வயது முதல் மூத்தமகள் என
ஊட்டி வளர்த்து சென்ற இடமெங்கும் சிறப்புற வாழ வழிகாட்டினீர்களே!

இந்தியாவில் உள்ள கோவில்களுக்கு
அழைத்துச் சென்றதுவும். நான் தொலைதூரத்தில்
வாழ்ந்தாலும் தொலைபேசியில்
ஒவ்வொரு வாரமும் அன்போடு கதைப்பதும்
என் நெஞ்சை விட்டு அகலாது உள்ளதப்பா

நீங்கள் சுகயீனமுற்றிருந்த போது
நான் ஊருக்கு வரவா அப்பா?
எனக் கேட்டபோது என்னை வரவேண்டாம்
எனத் தடுத்தது தான் ஏனோ?

இன்னும் நூறாண்டுகள் எம்மோடு நோய் நொடி
இன்றி வாழ்வீர்கள் என்றிருந்த எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்திச் சென்றீர்களே அப்பா!

உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்
மகள்
**ஜெகனி சுதாகரன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் யாழினியின் இதயக்குமுறல்

அம்மா இறந்தபின் தாய்க்குத் தாயாக, தந்தைக்கு தந்தையாக இருந்து என்னையும் என் குழந்தைகளையும் அன்பாகக் கவனித்தீர்கள். அம்மா இறந்த பின் சங்கீர்த்தை வளர்ப்பதற்கு உதவியின்றி தவித்தபோது எங்களுடன் வந்திருந்து சங்கீர்த்தை அன்புடன் பாசமாக வளர்த்தீர்கள்.

நீங்கள் எங்கள் வீட்டுக்கு வரும்போது இரண்டு வயதாகியும் கதைக்கத் தெரியாது இருந்த சங்கீர்த்தை "அம்மா" என்ற முதல் வார்த்தை சொல்ல வைத்தது நீங்கள் தான்.

உங்கள் அரவணைப்பிலும் அன்பிலும் நீங்கள் வழங்கிய ஆலோசனையிலும் தான் என் மூன்று பிள்ளைகளும் இவ்வளவு தூரம் கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்குகிறார்கள்.

நீங்கள் நோய்வாய்ப்பட்டு இருக்கும் வரையில் எல்லா குடும்பப் பொறுப்பையும் ஏற்று எங்களை எல்லாம் எந்த வேலையும் செய்யவிடாது பார்த்து வந்தீர்கள்.

நீங்கள் கடைசி வரையும் பிள்ளைகளுக்கு கஷ்டம் கொடுக்கக் கூடாது என்று இறக்கும்வரை உங்களது மருந்தாளர் பதிவு சான்றிதழை Asian Pharmacyக்கு கொடுத்து தொழில் புரிந்து வந்தீர்கள். இங்குள்ளவர்கள் உங்களைத்தான் சிறந்த உழைப்பாளியாக எடுத்துக் காட்டுவார்கள்.

நீங்கள் இருக்கும் வரை உங்கள் உழைப்பிலேயே வாழ்ந்து எங்கள் எல்லோரையும் வாழ வைத்தீர்கள்.

இதனால் தான் என்னவோ இறைவன் உங்கள் உடல் மருத்துவக் கல்லூரிக்கு கையளிப்பதற்குப் பதிலாக எங்களது வீட்டிற்கு அருகாமையிலே உங்களது உடலை அடக்கம் செய்து உங்கள் ஞாபகமாக கல்லறை கட்டி எப்போதும் சென்று உங்களை வணங்குவதற்கு எமக்கு சந்தர்ப்பம் வழங்கினார்.

நீங்கள் எம்மை விட்டு மறைந்து சென்றதாக நினைக்கவில்லை. அப்பா எனது பிள்ளைகள் எந்த ஒரு நல்ல காரியத்திற்கு செல்லும் போதும் உங்கள் நினைவிடத்திற்கு வந்து ஆசிபெற்றுத்தான் செல்வார்கள்.

உங்கள் அன்பான நினைவுகளுடன் ஆத்மசாந்திக்காயப் பிரார்த்திக்கும்

மகள்
**யாழினி பிரியகாந்தன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைய மகளின் நெஞ்சத்துயரத்தின் சில துளிகள்...

அன்னையை இழந்த துயர் ஆறவில்லை தந்தையே அதற்குள் எம்மை விட்டு நாம் காணா தேசம் சென்றதெங்கே? அப்பா! எந்த ஊர் சென்றாலும் தொலைபேசியில் என்னிடம் கூறி விட்டுத்தானே செல்லுவீர்கள் இறைவனடி போகும்போது மட்டும் எம்மை மறந்து சென்றதும் ஏனோ?

"அப்பா" என்று இன்று நான் அழைக்க நீங்களில்லையே. ஆயிரம் பேர் ஆறுதல் கூறினாலும் நீங்கள் இல்லாத குறை தீர்க்க யாருண்டு இப்பாரினிலே? எங்களை நீங்கள் ஒரு நாள் கூட கடுமையான வார்த்தைகளால் பேசியது இல்லையே.

பெண்பிள்ளைகள் என்று செல்லமாக அன்புடனும் பாசத்துடனும் வளர்த்தீர்களே உங்கள் பிரிவை எப்படி நாங்கள் தாங்குவோம் சொல்லுங்கள் அப்பா?

கடைக்குட்டியாய் நான் வந்து பிறந்தேன் கஷ்டம் தெரியாமல் எங்களை வளர்க்க வேண்டும் என்று வெளிநாடு சென்று உழைத்தீர்களே. 15 ஆண்டுகளில் ஒரு வருடத்தில் 30 நாட்கள் மட்டுமே எங்களுடன் உங்கள் விடுமுறையை களிப்பீர்களே. உங்கள் கல்வி, விளையாட்டுத் திறமைகளையும் சொல்லிச் சொல்லி அம்மா எங்கள் மூவரையும் உங்களைப் போலவே பாடசாலையில் அனைவரும் பாராட்டும் வகையில் வளர்த்து ஆளாக்கினார்.

உங்களுடன் இருக்கும் காலத்தில் மட்டுமல்ல எப்போதும் சந்தோஷமாக இருக்க இனிய இல்லற வாழ்வும் அமைத்துத் தந்து வளமான வாழ்விற்கு வழிகாட்டினீர்கள்.

உங்கள் பேரக்குழந்தைகள் பாடசாலையிலும் காற்பந்துக் கழத்திலும் சிறந்து விளையாடுவதைக் கேட்டு உள்ளம் பூரிப்படைந்தீர்களே. நீங்களே அவர்களுக்கு சிறந்த முன்னுதாரணம். உங்கள் ஆசைப்படி அவர்களை விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்க வைப்பேன்.

அயராத உழைப்பு, நேர்மை, நியாயம் என்ற கொள்கையுடன் சிறுவயது முதலே நீங்கள் உங்கள் நண்பர், உறவினர்களுக்கு செய்த உதவிகளோ ஏராளம். உங்கள் பிரிவறிந்து எனக்கு ஆறுதல் கூறிய எத்தனையோ பேர் உங்கள் அப்பா ஒரு நல்ல அன்பான பண்பான, நேர்மையான மனிதன் எங்களுக்கு எவ்வளவே உதவிகள் செய்தவர் என்று கூறி கண்ணீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டபோது நானே வியந்து போனேன். இப்படி ஒரு அப்பா எங்களுக்கு கிடைத்ததற்கு.

வாழும் காலத்திலும் எல்லோருக்கும் எடுத்துக்காட்டவும், உதவியாகவும் வாழ்ந்து இறந்த பின் உயிர் இறைவனுக்கும், உடல் மருத்துவப்பீடத்திற்கும் என்று நீங்கள் எடுத்த முடிவு உங்கள் பெருந்தன்மை யாருக்கு வரும் இவ்வுலகிலே?

உங்கள் அறிவுரைகள், அரவணைப்புக்கள் என்றும் எங்கள் நெஞ்சிலே உயிர்வாழும் நித்தமும் எம்மனதினில் நீங்காத ஒளிவிளக்காய் நீங்களும் அம்மாவும் தெய்வமாக இருந்து எம்மைக் காத்து வழிநடத்த வேண்டும்.

நிம்மதியான தூக்கம், நிரந்தரமான ஓய்வு, கவலையற்ற உலகம் என்று அமைதியுடன் என் அப்பாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

அன்பு மகள்
**குகானந்தி உருத்திரன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைய சகோதரனின் கண்ணீர் அஞ்சலி

1948ம் ஆண்டு மலேசியாவில் இருந்து சொந்த மண்ணுக்கு வந்து சேர்ந்தோம். சில மாதங்களில் தந்தை எம்மைவிட்டு பிரிய அம்மா செய்வதறியாது கண்ணீர் வடித்தபோது "அண்ணன் தம்பி நால்வர் உண்டு கவலை வேண்டாம்" என ஆறுதல் கூறுவார் கந்தசாமி அண்ணர். அது வெறும் வார்த்தைகள் அல்ல. சிறு வயதிலேயே குடும்பப்பாரம் சுமக்க ஆரம்பித்தோம். காலை 6.00 மணிக்கு கமம் செய்ய போய் 8.00 மணிக்கு வேலை முடித்து பாடசாலைக்கு ஓட வேண்டும்.

தண்ணீர் இறைக்கும்போது துலாவில் நானும் கந்தசாமி அண்ணாவும் ஓடுவோம். பாடசாலைக்கும் சேர்ந்து ஓடுவோம்.

உதைப்பந்தாட்டத்தில் 4-2-4 என்ற புதுமுறை புகுத்தப்பட்டபோது நடு மைதானத்தில் இருவராக கந்தசாமி அண்ணரும் நானும் விளையாடுவதைப் பார்த்தவர்கள் இரு நண்பர்கள் என நினைத்தோர் பலர் பாடசாலையில் படிக்கும்போது விளையாட்டுத்தான் எல்லாம் என இருந்தவர். பாடசாலை விட்ட பின் படிப்பில் ஆர்வம் காட்டி சிறந்த சித்தியடைந்து மருந்தாளராக தெரிவானார். நானும் அவர் வழியில் முன்னேறினேன்.

எமது குடும்பத்தில் மூத்த சகோதரன் முதல் கடைசி தங்கை வரை கந்தசாமி அண்ணர் தான் திருமணம் செய்து வைத்து வாழ வழிகாட்டியவர். தனது வாழ்வில் உண்மை, நேர்மை என்பவற்றை கடைப்பிடித்து மற்றவர்களுக்கு உதவி செய்வதுதான் அவர் கொள்கை. எமது நண்பர்கள் அவர்களின் பிள்ளைகளுக்குக் கூட வரன் தேடி வைத்தார்.

படித்த காலத்தில் தனக்கு படிக்க உதவிய Prof. கணபதிப்பிள்ளை குடும்பம். Dr. மகாலிங்கம் போன்றோரை கடைசிவரை மறக்காமல் நன்றி அறிதலுடன் வாழ்ந்து வந்தார்.

இந்த நல்ல உள்ளம் எம்மை விட்டுப் பிரிந்தது தாங்க முடியாத வேதனையில் எமது குடும்பம் திகில் அடைந்து உள்ளது. அவரின் ஆத்மா இறைவனடி சேர பிரார்த்திப்போம்.

**அன்புச் சகோதரன் சம்பந்தர்**
**அவுஸ்ரேலியா.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்கள் துயரம்

ஒரு கொடியில் மலர்களாய்
ஒரு வயிற்றில் கருவாகி
ஒரு மனமாய் ஊரறிய
உண்டுறங்கி வாழ்ந்தோமே
அன்பான சகோதரனே
ஆருயிரே எமைவிட்டு எங்கேதான் சென்றாயோ
உன் உருவம் தனை
எம் உள்ளத்தில் என்றும் அழிக்க முடியாது
கடல் எனக் கண்ணீர் பாய கதற
வைத்துவிட்டு கண்காணா தேசம்
சென்றதேனோ - இனி எப்போ
காண்போம் உமை நாம் - உம்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
மாவைக்கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

புஷ்பராணி, சிவபாதசுந்தரம்,
சிவராஜா, திருஞானசம்பந்தர்

Foot Ball I Team 1962



**Seated:** *The Principal, S. Manivarnan, S. Kandasamy, A. Sivanesaselvan, Mr. P. Ehamparam.*

**Standing:** *S. Sivanesan, T. Sivanenthiran, S. Manikavasagar, V. Sabaratnam, S. S. Ramakrishnan, R. Thavarajah, S. Thirugnanasambanthar, S. Chandrasegaram, S. Logathasan, S. Vairavanathan.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமா

மாமா நீங்கள் வருவீர்கள் என
மருமகன்மார் காத்திருப்போம்
ஆயிரம் பிறைகள் கண்டீர்
அனுபவப்பாடம் சொன்னீர்
கோயிலாய் எங்கள் இல்லம்
பொழிவுற வழியும் வைத்தீர்
எங்கள் அன்புச் செல்வங்களுக்கு
அன்பு மழை அறிவு மழை என்பன
பொழிந்திட்டீர்
வாயினால் வாழ்த்துத் தந்தீர்
வளம்பல அள்ளித் தந்தீர்
உங்களுடன் பகிர்ந்து கொண்ட
அன்பு மொழிக்கு மௌனம்
மட்டும் எங்கள் காணிக்கை

மருமக்கள்
**த.சுதாகரன், எ.பிரியகாந்தன், யோ.உருத்திரன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பப் பொறுப்பை கவனித்த அன்புமிகு மாமா

எங்கள் வீட்டில் வசிக்கத் தொடங்கிய நாளில் இருந்து மாமா அவர்களே குடும்பப் பொறுப்பினைத் தானே பொறுப்பேற்று மிகச் சிறப்பாக நடத்தி வந்தார். பேரன்கள் பேத்தியைப் பார்ப்பதிலிருந்து, சகல அலுவல்களையும் அவரே பொறுப்பேற்றுச் செய்வார்.

எமது ஸ்ரீசிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்தில் நான் பொருளாளராகவும், உப தலைவராகவும் கடமை பார்த்தபோது அவருக்கு அது மிகவும் விருப்பமாக இருந்ததனால் தானும் சகல ஒத்துழைப்புக்களையும் வழங்குவார். தவறாமல் ஆலயத்திற்கு வருகை தருவார்.

எனது கடைசி மகன் சங்கீர்த் பிள்ளையார் மீது பற்றுக் கொள்வதற்கும், தேவாரங்களைப் பாடுவதற்கும் மாமா அவர்களே ஊக்கப்படுத்துவார். பேரப்பிள்ளைகள் மீதும் மகள் யாழினி மீதும் மிக்க பாசத்தை வைத்திருந்தார்.

தவறாமல் ஆலயத்திற்கும், தான் கடமை பார்த்த மருந்தகத்திற்கும் சென்று வருவார். மருந்தகத்தை நடத்தியவர்கள் முஸ்லிம்களாக இருந்தபோதும் இவர் மீது அளவுக்கதிகமான நம்பிக்கை வைத்திருந்ததோடு, இவரைப் பற்றி என்னிடம் நேர்மையானவர் என்றும், பண்பாளர் என்றும் புகழ்ந்து கூறுவார்கள். இவ்வாறு செயற்பட்ட மாமாவின் இழப்பு எங்களுக்கு பேரதிர்ச்சியினையே தந்தது. அவரின் ஆத்மா சாந்தி பெறும் பொருட்டு இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

மருமகன்
**எ. பிரியகாந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TRIBUTE TO THATHA

My Thatha was a unique person. He was a kind gentle man that I loved dearly. He was not only my Thatta but he was my best friend. Over the years I have come to realise and be grateful that God blessed me by giving me such a wonderful Thatta. He was there for me when I needed him the most, and I will always be thankful for that. May your soul rest in peace Thatha.
Loving grand son
**Keshoban Suthakaran**

---

## TRIBUTE TO THATHA

My Thatha was a man to be idolized, he was a man with great talents, a man who would seek happiness and nothing else. He showed us the way to success and how to achieve well in life, I knew you were ill and I knew my parents were trying to help you as much as possible, but I never came to my senses and understood that you were in pain.

When I spoke to you on the phone you would always ask me how well I'm playing in football. I think it was because you were a football phenomenon when you were my age, you were the man who helped me open the door to my sports life. You will always inspire me to be great man.

You were a man who was full of greatness. You have rescued many people in Sri Lanka by being a pharmacist. I remember when you came to Germany and we watched the Euro Cup finals together, you made the moment so much better, I still have the messages you left us on the phone, it will never be lost

I felt like you were the light of this family because you would always guide us the right way. May your soul rest in peace Thatha.

**Loving Grand son**
Danushan Suthaharan

---


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமிகு தாத்தா

தாத்தா என்னோடு மிகவும் அன்பாக நடந்து கொள்வார். என்னை ஒவ்வொரு நாளும் எங்கள் இடத்தில் உள்ள பிள்ளையார் கோயிலுக்கு கூட்டிச் செல்வதோடு, பைசிக்களில் பாடசாலையிலும் கொண்டு போய் விடுவார். பள்ளிக்கூடம் விடும்போது என்னை வந்து வீட்டிற்கு கூட்டி வருவார். வெளியில் போகும்போதும் வரும்போதும் எனக்கு விருப்பமான தின்பண்டங்களை வாங்கித் தருவார்.

தாத்தா தன் நாய்களுக்கு தேவையான உணவு வகைகளை வாங்கி வந்து கொடுத்து மிக அன்பாக கவனிப்பார்.

"தாத்தா செத்தா நானும் செத்துப்போவேன்" என்று அப்பாவிடம் கூறுவேன். அவர் அப்படிச் சொல்லக் கூடாது என்று புத்திமதி கூறுவார்.

தாத்தா என்றால் எனக்கு நல்ல விருப்பம்
இறைவனிடம் சென்ற தாத்தாவுக்கு இறுதியாக நானும் தேவாரம் பாடினேன்.

**கடைக்குட்டிப் பேரன்**
**சங்கீர்த் பிரியகாந்தன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அன்புத் தாத்தா

நாங்கள் மூவரும் தாத்தா, தாத்தா
என்று அன்பாகக் கூப்பிடுவோம்

அம்மம்மா இல்லா குறை தெரியாது
எங்கும் எங்களை ஆசையாகக்
கூட்டிச் செல்வார்
நாங்கள் கேட்கும் எல்லாவற்றையும்
அன்பாக இல்லை என்று கூறாமல்
வாங்கித் தருவார்

நாங்கள் பரீட்சையில் நூறு புள்ளிகள்
எடுக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும்
நூறு ரூபாய் தந்து எங்களை கல்வி
கற்க ஊக்குவிப்பார்

அம்மா, அப்பா பாடசாலை செல்லும்போது
எமக்கு அன்புடனே உணவளித்து
அவர்கள் வரும்வரை அன்பாகப் பாடங்கள்
சொல்லித் தந்திடுவார்

எங்கள் தம்பி சங்கீர்த்தை பாடசாலை
கூட்டிச் சென்று, பாடசாலை முடித்ததும்
பத்திரமாய் வீட்டுக்கு கூட்டிவந்து
பிஸ்கற்றும் சோடாவும் எப்போதும் வங்கித்தருவார்

தாத்தா என்றால் எங்கள் ஆருயிர் அல்லவோ!
எப்போது தாத்தா உங்களை இவ்வுலகில் காண்பது
ஏங்குகிறோம் தாத்தா உங்கள் முகம் காண்பதற்கு

நீங்கள் பாசமாக வளர்த்த நாய்கள்
இரண்டும் உங்கள் இறுதிப் பயணத்தில்
உங்களைத் தேடித் தவிக்கின்றன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை எல்லாம் விட்டுச்செல்ல
எப்படி உங்களுக்கு மனது வந்தது
எங்களுக்கு எப்போதும் உங்கள்
நினைவுதான்

உங்கள் ஆசைப்படி நாங்கள் நன்றாகப்படித்து
பார்போற்றும் உத்தமர்களாக வாழ்வோம்!

உங்கள் ஆத்மா சாந்திக்காய் வேண்டி நிற்கும்

ஆருயிர்ச் செல்வங்கள்
**சந்தோஷ், சப்தகி, சங்கீர்த்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## AN UNSEREN THATTA

Wir moechten uns hiermit nochmal bei unserem Thatta verabschieden und bedanken.

Wir waren auf dich stolz! Du warst ein ruhiger Mensch, warmherzig, besonnen und bedacht. Wir wollten vieles von dir lernen. Du bist unserer Vorbild im Fussball. Du has deine Pflichten erfuellt. Du hast 3 kinder und 7 wundervolle Enkelkinder, in uns lebst du weiter.

Du sitzt nun mit ammamma zusammen und ihr seid endlich wieder vereint, das beruhigt uns alle ungemein.

Wir haben dich sehr lieb.
Wir vermissen dich so sehr.

Deine liebe Enkelkinder,
**Abinayan & Archsuthan Uruthiran**
(Germany)

---

## பெறாமக்கள் துயரம்

புலம்பெயர்ந்து நாங்கள் பிரிந்து
ஒவ்வொரு நாட்டிலும் இருந்தோம்
நீங்கள் தவறாது தொலைபேசியில்
அன்புடனே கதைப்பீர்கள்
எத்தனை உதவி என்றாலும்
எண்ணாமல் செய்தீர்களே
அத்தனையையும் நினைக்கின்றோம்
உளவு காலன் அறிந்தோ உங்கள்
உயிரை பறித்துச் சென்றிட்டான்
அளவிலா துயர் கொண்டே நாம்
அழுது கலங்கி நிற்கின்றோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்த குணம் மிக்க சம்பந்தி கந்தசாமி அவர்கள்

பொறுமையும், சகிப்புத்தன்மையும் உள்ளவராக எனது மகன் பிரியகாந்தனது மாமனார் கந்தசாமி சம்பந்தி அவர்கள் விளங்கினார். தனது மகள் யாழினியின் வீட்டில் வசிக்கத் தொடங்கிய நாட்களிலிருந்து அடிக்கடி எனது வீட்டிற்கு வருகை தந்து அளவளாவுவார். எந்தவொரு விடயமாக இருந்தாலும் மிக உன்னிப்பாக அதில் கவனம் செலுத்துவார். அவர் ஒரு மருந்தாளராகவிருந்த காரணத்தால் நோய்க்குரிய மருந்துகளைப்பற்றி எனக்கு மிகவும் சிறப்பாக விளக்கம் தருவார். சில சந்தரப்பங்களில் சில மருந்துகளை அவரே வாங்கி வந்து என்னிடம் தரும்போது மிக நல்ல அறிவுரைகளையும் சொல்லிக் கொடுக்கும் பண்பாளர்.

வைத்தியத்துறையில் படித்துக் கொண்டிருந்த எனது மகள் தர்மினிக்கு பெறுமதிமிக்க நூல்களைக் கொடுத்து அவரது படிப்பை ஊக்கப்படுத்துவார். எனது குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் கந்தசாமி மாமா என்றால் நல்ல விருப்பம். பாசிக்குடாவிற்கு செல்வதாகவிருந்தாலும் அல்லது கலியாண வீடுகளுக்குச் செல்வதாகவிருந்தாலும் தானும் எங்களுடன் சேர்ந்து கொள்வார். பழகுவதற்கு இனியவர், பண்பாளர், பொறுமைசாலி, சகிப்புத் தன்மையுள்ளவர். எனது மனைவி பொறுமைக்கு உதாரணமாகச் சம்பந்தி கந்தசாமி அவர்களையே எடுத்துக் காட்டுவார்.

பேரப்பிள்ளைகளுடன் அளவு கடந்த அன்பையும், பாசத்தையும் வைத்திருந்தார். எமது ஆலயமான ஸ்ரீசிந்தாமணிப்பிள்ளையார் மீது மிகவும் பக்தியுடன் ஒவ்வொரு நாளும் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டு வருவார். கடைசிப் பேரன் சங்கீர்த்தை தன்னுடன் ஆலயத்திற்கு அழைத்துச் செல்வதோடு பாடசாலைக்கும் கூட்டிச் சென்று அழைத்து வருவதை தவறாமல் செய்து வந்தார்.

சம்பந்தி கந்தசாமி அவர்களுடைய இழப்பு ஈடுசெய்ய முடியாத தொன்றாகும். எனது குடும்பம் சார்பாக அன்னாரது ஆத்மா இறைவனடி சேரவேண்டியும், அவரது பிரிவால் துயருறும் புதல்வியர்க்கும் குடும்ப உறவினர்களுக்கும் ஆறுதல் கூறி இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

சம்பந்தி
எஸ்.எதிர்மன்னசிங்கம்
முன்னாள் கலாச்சாரப் பணிப்பாளர்(கல்வி அமைச்சு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான கந்தசாமி மாமா

கந்தசாமி மாமா நான் க.பொ.த.உயர்தரம் விஞ்ஞானப் பிரிவில் கல்விகற்க தொடங்கியதிலிருந்து என்னை ஊக்கப்படுத்தி நல்லதோர் வழிகாட்டி யாக இருந்து வந்தார்.

நான் வைத்தியத்துறைக்கு தெரிவாகி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு சென்றதும், வைத்தியத்துறை சார்ந்த பெறுமதியான நல்ல நூல்களை எனக்கு கொண்டு வந்து தருவார். யாழ்ப்பாணம் வரும்போது அங்கு வந்து என்னைச் சந்திப்பார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கலியாண வீடொன்றிக்கு நான் அவரை எனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற சம்பவம் இன்னும் என் மனதில் நிழலாடுகின்றது.

கந்தசாமி மாமா சுகவீனமுற்று மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது நானும் படிப்பை முடித்து மட்/வைத்திய பீடத்தில் Demonstrator ஆக கடமை ஆற்றியதால் மாமா அவர்கள், இருந்த 16ம் வாட்டிற்கு அடிக்கடி சென்று அவரைப் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இதன் காரணமாக அவரைக் கவனித்த வைத்தியர்களுடனும் இவரது உடல் நலம் பற்றி விசாரித்து அறிந்து கொள்ளவும் முடிந்தது.

எல்லோருடனும் மிகப் பண்பாக பழகும் கந்தசாமி மாமாவின் மறைவு எம் எல்லோருக்கும் பேரிழப்பாக உள்ளது.

அவரது ஆத்மா இறைபதம் சேர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**Dr.தர்மினி எதிர்மன்னசிங்கம்**
மருமகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TRIBUTE TO OUR BROTHER-IN-LAW KANDASAMY

Kandasamy anna was a friendly, pleasant person who easily got along with everyone around him. His sincere and outgoing nature brought to him lots of adoring friends and their love. I witness a friend outpouring emotion and happiness during the reunion with him in Mannar, whom he had not seen for over 35 years. He respected everyone for who they are. He was proud of the contribution that him, his brothers and his younger sister made towards the successful history of his school, Mahajana College.

He inspired us to believe that we could improve our lives and work environment by going overseas to work. He convinced us that by moving forward, taking risks and sacrificing family commitments for a short time will improve our future. He encouraged me to take up the Assistant Pharmacist job in Oman. This experience strengthens my confidence to establish a career and reunite my family in Australia.

A very softly spoken person, who did not want to trouble anyone, even in his passing. We will miss him immensely and pray for his soul to rest in peace.

**Rajes Sampanthar.**
**(Australia).**

---

Accept our condolences on the passing away of your kind brother Kandasamy. One and a half years back Lyda my wife and myself visited him in Batticaloa. He always was in touch with me either through letters or through telephone. One month back he spoke about his health and about his medical examination results. He was also working as a Pharmacist in Batticaloa till his final days. Please inform our sadness to his daughters, son-in-law and grandchildren.

**Regards,**
**Pathmamanoharan (Holand)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TRIBUTE TO OUR PERIAPPA**

Periappa had such a generous heart and a gentle-nature, It's hard to find anyone who would have anything bad to say about him. He always had a warm and pleasant smile. He helped everyone and anyone without a whim of thought or consideration to whatever else that he may have going on in his own life. He would drop everything and run to the rescue of his family. Knowing that periappa was by our side we were brave to venture dangerous territories without a care in the world. When Kanna and I went to visit our family in Vavuniya in January 2000, we were all worried as to what might happen because it was our first visit back to Sri Lanka since we left home. He made us feel so safe and secure, while he took on all the worrying and planning to get us to Vavuniya and back in two days in the midst of a civil war. Having enjoyed most of my life in Australia, I never realized till now how much periappa would have done to prepare for such a trip.

We all know it's not easy to get anything done in Sri Lanka especially not in those days. He never once left us out of his sight for the whole trip. Within a month of our visit to Sri Lanka appamma passed away and we are forever grateful that periappa was able to help us to meet appamma that one last time. May his soul rest in peace.

**Gaya Tharmendra (Australia)**

---

Indeed I have not only lost a relative but one of my professions fellow brother a loving character of exemplary qualities; simple, unassuming, honest, kind and soft speaking human being, of course I have rarely met few such in my career. many of them were crooks and dirty cheats.

**Ramachandran and Manohary**
**(London).**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்ப ஒளி விளக்காய் திகழ்ந்து கடந்த 08.04.2015 அன்று இறைவன் தாள் சேர்ந்த அமரர் சோமசுந்தரம் கந்தசாமி அவர்களின் மறைவுச் செய்தியறிந்து எமக்கு நேரிலும் தொலைபேசி மூலமும் துயர் பகிர்ந்து உதவிகள் புரிந்தவர்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும்.

மேலும் எமது தந்தைக்கு வைத்திய ஆலோசனை வழங்கியது மட்டுமல்லாது அவரை வைத்தியசாலையில் நேரடியாகச் சென்று பார்வையிட்ட அவரது உறவினரும், வைத்தியருமான Dr. கையிலைநாதன் அவர்களுக்கும், மருத்துவ உதவி புரிந்த வைத்தியர்கள் Dr. அகிலன், Dr. ஸேப்ரா, Dr. சுந்தரேசன், Dr. தர்மினி எதிரமன்னசிங்கம் மற்றும் அவரது உடலை மருத்துவ பீடத்திற்கு வழங்குவதற்கு கடைசி நிமிடம் வரை முயற்சி செய்த Dr. லாவண்யா கஜேந்திரன் அவர்களுக்கும் வீட்டுக்கிருத்தியை, அந்தியேட்டி ஆகியவற்றில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் ஈடுபட்டோரிற்கும் மேலும் அழைப்பிதழ், கல்வெட்டு என்பவற்றை அழகுற அமைத்துத் தந்த JR அச்சகத்தினர் லண்டன், அவர்கட்கும் மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி


இங்ஙனம் குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed & Printed @ JR Print-London, www.jrprint.com T : 0208 503 6643